448

பதிவு எண் — M. 572 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குருதலம், மாம்பாக்கம்; செய, ஆனி. ௧௧ 25—6—54 தளிர் 36

## நல்வினையைப் பெறலாமே!

"நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே"

(சம்பந்தர்)

'நல்நெஞ்சே! சாம்நாளும் வாழ்நாளும் யாரறிவார்? சாய்க்காட்டு எம்பெருமாற்கே பூ-நாளும் தலைசுமப்ப, புகழ் நாமம் செவி கேட்ப, நாநாளும் நவின்றேத்த நல்வினை பெறலாம்—நீ நினை கண்டாய்' என்பது உரைநடை.

'உயிர்களாகிய நம்மவர்தம் மனமோ உலகில் மலிந்த தீய காரியங்களிலே பெரும்பாலுஞ் சென்று சென்று, உழன்று, பழகி அவற்றையே கொடிறுபோல் பற்றிக்கொண்டு நல்வழியில் திரும்பாது கிடப்பதாதலினால், இனிய மொழியால் நன்னெஞ்சே! என விளித்து, உலகமோ நிலையாமையை உடையது. சாகும்நாள் இது வென்றும், வாழும்நாள் இவ்வளவென்றும் எவராலும் உணர்வதரிது. ஆகையால், திருப்பூங் கூடையில் நிரம்ப ஆய்ந்த நறுமல ரெடுத்துத் தலையாலே சுமந்து சுமந்து கொண்டுவந்து இறைவனை வழிபட்டு, யாவராலும் புகழ்ந்து பேசப் பெறும் அவர் தம் திருப்பெயர்களைப் பெரியார் சொல்லச் செவியாரக் கேட்டும், திருவைந்தெழுத்தினை ஒவ்வொரு நாளும் எந்த நேரத்திலும் உருகி உருகிச் சொல்லித் துதித்து வருவாயேயாகில், நீ சிவபிரான் திருவருளுக் குரிமையாகும் நல்வினையைப் பெறலாகும். இவற்றை மறவாமல் எப்போதும் நினைவில் வைத்துக் கொள்வாயாக' என்றார்.

"பூநாளுந் தலைசுமப்ப" என்றதனால் ஆர்வமின்றி ஏதோ கிடைத்தது போதும் என்றெண்ணிக் கொண்டு வழிபடுவது சிறந்ததன்று என்பது பெற்றாம்.

"பரந்துபல் ஆய் மலரிட்டு முட்டாது அடியே யிறைஞ்சி" என்பது மணிவாசகப் பெருமான் வாக்கு.

'மூர்த்தி'

**"முல்லைக் கொடி"**
(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
**6-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(23-10-53 முதல்)**

| | | | |
|---|---|---|---|
| உள்நாடு | ரூ. 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. 6 | 0 | 0 |
| தனித் தாள் | 0 | 1 | 0 |

ஆயுள்—
கையொப்பம் ரூ. 100 0 0
விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.



| இலை | சேய, ஆனி, | தளிர் |
|---|---|---|
| 6 | 25-6-54 வெள்ளி. | 36 |



# இலங்கை இந்தியர்

"தம்பி! நீ மிகவும் பலசாலி. உன் அஞ்சா நெஞ்சுக்கு சவால் விடுகிறது இந்த அலை வீசும் கடல்! உனக்கு இன்ப வாழ்க்கையையும், செல்வமும் தருகிறேன். நீ உன் மூச்சை அடக்கி கடலுக்கு அடியில் உள்ள முத்துக்களை எடுத்துவா! கண்ணுக்கெட்டிய தூரம் உள்ள கடல் எனக்குத்தான் உரிமை. அஞ்சாதே! "வெற்றி கிடைக்கும்" என்றான் ஒரு முத்து வணிகன், பிறந்த ஊரை விட்டு பிழைப்புத் தேடி அலைந்த ஒரு உழைப்பின் உருவத்தைப் பார்த்து.

வணிகனின் தேன்மொழியில் மயங்கி, மூச்சை அடக்கினான்; கடலில் எதிர்ப்பட்ட இடர்களை வென்று, கண்பறிக்கும் முத்துக்களைக் கரையில் சேர்த்தான்; உணவு கிடைத்த களிப்பில் உயிருக்கும் அஞ்சாது செயல் புரிந்தான்; ஊருக்கு உணவளித்து ஓட்டாண்டி ஆனவனின் மகன்!

முத்துக்கள் எடுக்கும் வேலை முடிந்தது. முத்து வியாபாரி, நெற் களஞ்சியங்களில் முத்துக்களை விற்றபணத்தை நிரப்பினான். இனி அத்தொழிலாளி தம்மிடம் இருப்பது பேராபத்து என நினைத்து, அவனை அழைத்து; தம்பி இத்தனை நாள் உனக்கு உணவளித்ததால் என் களஞ்சியத்து நெல் எல்லாம் தீர்ந்துவிட்டது. நீ கொண்டு வந்தவை யாவும் முத்துக்கள் அல்ல, கிளிஞ்சல்கள்! உன்னால் எனக்குப் பெருத்த நட்டந்தான். ஆகவே, இந்நொடியில் இந்த ஊரை விட்டு ஓடிவிடவேண்டும் இல்லையெனில், இதே கடலில் உன்னை மூழ்கடித்துக் கொன்றுவிடுவேன்" என்று சினந்து கூறினான்.

அந்த உழைப்பாளி ஏதுமறியாது கலங்கித் தத்தளித்தான். இறக்கவும் முடியாமல் இருக்கவும் முடியாமல் நடைப்பிணமானான்.

ஆம்! இலங்கை இந்தியர்கள் நடைப் பிணமாகத்தான் வாழ்கிறார்கள்; சொல்லளவில்.

தம் பச்சை இரத்தத்தை நீராக்கி, இலங்கையைப் பொன்னாடாக்கிய நம் உடன் பிறந்தவர்கள் துரத்தப்படுகிறார்கள். நீர்க் கடலைத் தாண்டியவர்கள், துயரக் கடலைக் கடக்க முடியாது தவிக்கின்றனர்.

வயலுக்கு நீர் பாய்ச்ச கிணறு வெட்ட, அது [illegible] பொய்கையாக மா[illegible] [illegible], நெருக்கும் உழவன் நிலைபோலாயினர், உலகாண்ட பரம்பரையினர்!

இலங்கை வாழ் இந்தியர்கள், பிற நாட்டினரைப்போல, இலங்கையர்களைச் சுரண்டிக் கொழுக்கவில்லை; மொழியை அழிக்கவோ, கலாசாரத்தை மாற்றவோ இல்லை. பின் என்ன செய்தனர்? உழைப்பைக் குவித்து இலங்கையின் பொருளாதார மாளிகையின் தூண்களாகத் திகழ்ந்து விளங்குகின்றவர்கள் இன்று துரத்தப் படுகிறார்கள். இச்செயல் வருங்கால வளமான இலங்கைக்கு அழிவைத் தேடித்தரும்.

இலங்கையில் கொடிய பஞ்சம் இருந்தபோது தமிழகத்து வள்ளல் ஏழு கப்பல் நிறைய நெல் அனுப்பி, அவர்கள் துயர் துடைத்ததும் ஒரு காலத்தில் இலங்கையும், இந்தியாவும் ஒரே நிலமாக இருந்ததும் உண்டு என்பதனை இலங்கையர் மறைக்க முடியாது; மறந்திருக்கவும் வழியில்லை

"இலங்கை இந்தியரே வெளியேறுங்கள்!" என்ற குரல், இலங்கையின் விடுதலைக்கு முன்னர் அவ்வளவாக ஒலித்ததில்லை. விடுதலை கிடைத்ததும்—நல்வாழ்வுக்கான உரிமைச் சாசனம் கிடைத்ததும் இந்தியர்களை வெளியேற்றும் பணியில் இறங்கி விட்டது மாடி ஏறியதும் ஏணியைத் தள்ளுவது போன்ற நிலைக்கு இலங்கை ஆட்சி பீடம் வந்ததும் இந்நாட்டின் தலைவர்களும் அண்மையில் கூடிப்பேசிப் பயனற்றுப் போனதையும் நினைத்து வருந்த வேண்டியுள்ளது.

வாழ்க இலங்கை இந்தியர்!
வளர்க அவர் தம் உரிமை!

—செ. கிருட்டினசாமி.

# இறைவனின் இருப்பிடம்

[அறிஞர் வாஸ்வானியின் வாய்மொழிகள்]

'இல்லையே யென்னுதான்'

மனச் சான்றினை நம் முன்னோர்கள் தலையாய ஒன்றாகக் கருதி அம் மனச்சான்றுக்கு மாறுபாடில்லாமல் செயல்களைச் செய்ய வேண்டுமெனக் கருதினார்கள்.

தற்காலத்தில், மனச்சான்றுக்குப் பதிலாகத் தங்கள் மனத்திலே உதிக்கும் எண்ணங்களையே பெரிதாகக் கொண்டு அவற்றைப் பின்பற்றுகின்றனர்.

நம் முன்னோர்கள் சமய உண்மைகளை வாழ்க்கையில் வழிகாட்டியாகக் கருதினார்கள். தற்காலத்தவர்களோ விஞ்ஞான சாத்திரத்தினை வழிகாட்டியாகக் கருதுகின்றனர்.

மக்கள் செய்யும் செயல்களெல்லாம் கண்ணுக்குத் தெரியாத மோட்ச பலனை உத்தேசித்ததாக இருந்தன ஆனால், இப்போதோ மக்களுக்கு அதில் நம்பிக்கை போய்விட்டது. நேருக்கு நேரோ காணும் பலனில்தான் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு ஏற்பட்டிருக்கும் மாறுதல்களுக்கு நம்முடைய பண்டைக் காலத்துச் சமய உண்மைகளும், தத்துவங்களும் பதில் கூறுமா? அவ்வளவு சக்தி அவற்றிற்கு இருக்கின்றனவா? என்னும் கேள்விகட்கு நான் மிக்க வணக்கத்துடனும் அழுத்தமாகவும் 'முடியும்' என்று சொல்லத் தயார்.

உலகத்தில் நாளுக்கு நாள் இளைஞர்களின் உள்ளத்திலே கடவுள் ஒருவர் இருக்கிறாரோ? என்னும் ஐயப்பாடு வளர்ந்து வருகின்றது உண்மைதான் ஆனால், விஞ்ஞான நிபுணர்களின் மனத்திலே கடவுள் இருக்கத்தான் இருக்கிறார் என்னும் எண்ணமும் நாடோறும் வளர்ந்து உறுதிப்பட்டு வருவதை நாம் கவனிக்க வேண்டும்.

விஞ்ஞான சாத்திரங்களெல்லாம் சமய சாத்திரங்களுக்குப் போட்டியாகத் தோன்றியவையென்றும், அவை இரண்டும் வாதப் பிரதிவாதம் செய்யும் போட்டி சாத்திரங்களென்றும் நினைப்பது மிகத் தவறு. விஞ்ஞான சாத்திரங்களைப் போலவே, சமய சாத்திரங்களும் ஒன்றென்று கருத வேண்டும். ஏனெனில், விஞ்ஞான சாத்திரங்கள் இயற்கையைக் குறித்துக் கூறுவதுபோலவே சமய சாத்திரங்கள் வாழ்க்கை முறையைக் குறித்துக் கூறுவதேயாம். ஆகவே, இரண்டும் இருவித சாத்திரங்களேயாகும்.

உலகத்திலுள்ள எல்லா மதங்களும் உபதேசிக்கும் முதல் தத்துவம்என்னவெனில் 'சத்தியமாக இரு' என்பதுதான். இன்றைய உலகம் எந்த நிலையில் இருக்கிறதென்று பாருங்கள். உலகெங்கும் அரசியல் சுதந்திரக் கூப்பாடு வானைப் பிளக்கின்றது. ஆனால், சத்தியமில்லாமற் போனால் உண்மையான சுதந்திரம் நிலைக்க முடியாதென்று, ஜீவ தத்துவத்தைக் கோஷமிடுகிறவர்களில் பெரும் பான்மையோர் உணரவில்லை.

இன்று உலகத்தில் ஒவ்வொரு தேசத்திலும் அரசியல் எவ்வாறு நடக்கின்றது என்பதைக்கவனியுங்கள். 'ராஜ தந்திரம்' என்னும் முறையைப் பிரதானமாகக் கொண்டுதான் உலகெங்கும் நிர்வாகம் நடக்கின்றது. ஒவ்வொரு அரசாங்கமும் ரகசியமாகச்சூழ்ச்சிகள் செய்கின்றனர் உலகம் இந்த நிலைமைக்கு வந்துவிட்டது.

உலக மக்கள் அனைவரும் சத்தியத்தை மூச்சாகக்கொண்டு வாழ்க்கையை நடத்த முற்படுவார்களாகில், இன்று புதைந்து மண் மேடிட்டு மறைந்து போகக் கூடிய நிலைமையில் இருக்கும் நம் நாகரிகம் உயிர் பெற்று நடமாடத் தொடங்கும்.

உலகத்திலுள்ள மதங்களெல்லாம் ஒரே சத்தியத்தைப் போதிக்கிறதென்பது உண்மையாயின்,

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்




பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# இனிய பொழுது

நா. சுப்பிரமணியன்.

வழக்கம்போல் இரவு எட்டு மணிக்குமேல் என் தமையனாருடனும் தாயுடனும் உரையாடிக் கொண்டிருந்தேன். எங்கள் பேச்சு பலப்பல வழிகளில் நுழைந்து விரிந்து பாய்ந்து ஓடிக் கொண்டிருந்தது. எனதன்னையார் “எங்கெல்லாமோ சுற்றினாயே! திருப்பெருந்துறைக்குச் சென்று வழிபட்டாயா?” என்று என் தமையனாரைக் கேட்டனர். திருப்பெருந்துறைக்குச் செல்லும் வழிகள். கோயில்; வேலைப்பாடுகள்; ஊர்; மக்கள்; வாழ்க்கை வரலாறுகள்; கோயிலினுட் சென்றதும் ஏற்படும் உணர்ச்சி முதலியவைகளை விரிவாகக் கூறி, அறிவின் திறனைப் பற்றி விளக்கினார்கள். உடனே என் மனம் அறிவைப்பற்றிச் சிறிது கேட்கலாமா? என விழைந்தது. என் தமையனாரும் உடன்பட்டனர்.

“தம்பி அறிவில் இருவகை உண்டு. அதுவே சிற்றறிவு பேரறிவு எனப்படும். தோன்றி நின்று அழிவன வெல்லாம் மாயா காரிய தத்துவங்கள். தோன்றி நின்று அழியாதது எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும். பரம்பொருள் ஒன்றே. இதுவே பேரறிவு எனப்படும். அறிவு திடுமெனப் பரம்பொருளாகிய பேரறிவுடன் சார்ந்து அதுவாகாது; தத்துவங்களைப் படிப்படியே பற்றிச் சென்று பேரறிவுடன் சார்ந்துதான் அதுவாகும். அதுவாதல் என்று சொல்வதில் மயக்கம் உண்டாகும். ‘சொல்’ உலகில் நிற்கும் வரை மயக்கம் உண்டாதல் இயல்பே. ‘சொல்’ கடந்த அநுபூதியில் எந்தவிதமான மயக்கமும் உண்டாவதில்லை. பேரறிவுடன் சார்ந்து அதுவாவது சிற்றறிவு என்றும், அஃது ஆன்மா என்றும், பேரறிவு பரமான்மா என்றும் ஒரு சிலர் கூறுவர். சிற்றறிவு பேரறிவு பற்றிய வாதங்கட்கு நம் நாடு முன்னணியில் நிற்பது. இப்போது அரசியல் போராட்டம் அவ்வாதப் போராட்டங்களை மீறிவிட்டது. சிற்றறிவும் பேரறிவும் ‘ஒன்று’ ‘வேறு’ ‘கலப்பு’ முதலிய கொள்கைகளைச் சிந்திக்கவோ ஆராயவோ வேண்டா. உண்மை ஒன்றே. இஃது அநுபூதியில் விளங்கும். ஓர் உண்மை பலதிறக் கவடு கோடுகளைவிட்டு நிற்கிறது. கவடு கோடுகட்குக் காரணம் கால தேச வர்த்தமானமே. ஒவ்வோர் கொள்கையை நிறைவு செய்ய ஒவ்வோர் அறிஞர் தோன்றுவர். கொள்கைகள் கால தேச வர்த்தமானத்தை யொட்டி எழுவன என்னும் நுட்பம் விளங்கப் பெற்றவர் மனம் வாதப்போரில் செல்லாது. “சிற்றறிவைப் பேரறிவாக்கும் முயற்சி வேண்டும். அது குறித்து வழிபாடு நிகழ்த்த வேண்டும். இது இயற்கை அன்னையின் குறிக்கோள். இவ் வன்னையின் குறிக்கோளும் கால தேச வர்த்தமானத்துக்கு ஏற்றவாறு அமைந்து பிறக்கும்” என்றனர்.

அமைதியாகக் கேட்டு வந்த என் அன்னையார். “தம்பி! இவைகட்கெல்லாம் மூல காரணன் ஒருவன் உளன். அவன் உலகெலாம் படைத்துச் சரிவர நடத்தி அதனை மீண்டும் மறைத்துப் படைப்பவன். அவன் பேராற்றலுடையவன். உண்மை அறிவு; இன்ப வடிவினன்; அடியார்க்கு எளிவந்தருளும் தன்மையன்; தூய்மையின் எல்லை; மன அமைதியின் வாழ்வு; எல்லையற்ற இன்பக் கருவூலம். மக்கள் உயிர்க்கு உயிர்.

“அண்டப் பகுதியின்
உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை
வளப் பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று
நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட”

(திருவாசகம்)

விரிந்தன வாகிய இப் பெரும் புவனப் படைப்பு ஓர் வினை முதலின்றித் தானே தோன்றக் கூடியதன்று. இஃது படைத்தல் தொழிலில் கை தேர்ந்த இறைவனின் அழகிய வினையாகும்.

“உலகெலா மாகி வேறாய்
உடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா உயிர்கள் கன்மத்
தாணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய் இவற்றின் தன்மை
தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீர் அமலனாகி
நின்றனன் நீக்கா தெங்கும்”

(சித்தி 2. சூ)

என்னும் மெய்ம் மொழிக்கிணங்க இறைவன் இதை நடத்துதற்குத் தானே ஈண்டிருக்கவோ, தனதாற்றல் முழுமையும் செலுத்தவோ வேண்டுவதும் இல்லை. அவன் இத்தகையதோர் நற்றிறம் படைத்தவன். செய்வதொன்றறியாது மயங்கும் உயிர், ஐந்தொழிலும் நிகழ்த்தும் அப்பன் கூத்தப் பெருமான் உருவத்தை உன்னி உன்னி உருகி உருகி வாயாற மனமாற ஏத்தியும் பாடியும் எண்ணியும் வழிபடின் ஆ! எவ்வளவு இன்பம் பெருகும்.” என்று சொல்லிப் பேசாதிருந்தனர்.

நான் என்னை அறியாமலேயே

"குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த
பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும்
வேண்டுவதே இந்த மானிலத்தே"

என்ற அப்ப மூர்த்திகளின் அருட் பாடலை அகங் குழைந்து பாடினேன். இதுவரையில் அன்னையின் பேச்சில் மூழ்கியிருந்த தமையனார். "தம்பி! கூத்தோவியம் எப்படியிருக்கின்றது பார்த்தாயா? இத் திருக்கூத்தின் உண்மையை யுணர்ந்தே மேனாட்டாரும் நடராஜ உருவத்தைப் போற்றுகின்றனர் எல்லாவற்றையும் கடந்து உருவமற்றதாயுள்ள கடவுள் நிலை போக்குவரவற்றது; அசைவற்றது; தொழிலற்றது. அதற்குக் கூத்தேது, எனின்? இயற்கையை உடலாகக் கொண்டு எங்கும் எதிலும் வீற்றிருக்கும் இறை நிலைக்குத் தொழில் தானே உண்டாகும். தொழில் இல்லையேல் இயற்கை எவ்வாறு இயங்கும்? உயிர்களைத் தன்னைப் போலாக்கவே கடவுள் இயற்கையை உடலாகத் தாங்கி அதை இயக்குகிறது ஐயன் கூத்து எங்கும் நடைபெறுகிறது. அக் கூத்து உயிரில்—உள்ளத்தில்— வானில் நடைபெறுகிறது உலகில்—உயர் அண்டங்களில்—அண்ட பகிரண்டங்களில் நடைபெறுகிறது. அணுவில் அணுவுக் கணுவில் நடைபெறுகிறது. அத் திரு நடம் இல்லையேல் உலகில் இயக்கம் ஏது? உயிர்கட்கு வாழ்க்கை ஏது?

(வரும்)

# இலக்கிய உலகில்.....நாம்!

'மூர்த்தி'

அச்சம், பேடிமை, அடிமைச் சிறுமதி, இவைகளையே உயர்ந்த நிலைக்களமாக, பற்றுக் கோடாகக் கொண்டவர்கள்தான் இன்றைய மக்கள்' ஆ! ஆ! எவ்வளவு அழகாக நாட்டு நிலையை உள்ளமென்னும் கிழியில் அழியா ஓவியமாக வரைந்து காட்டுகிறார்; ஓவியத்தால் மட்டுமல்ல சொல்லாலும்; எப்படி? 'ஊமைச் சனங்கள்' என்றழைக்கின்றார். ஆம், ஒத்துக்கொண்டு நாணமுற வேண்டிய நிலை ஒருசில வருடங்களுக்கு முன் தமிழ் நாட்டுக்கு இருந்தது. வாழ்க்கை நிலையே இவ்வாறெனின் இலக்கிய நிலையைப் பற்றிக் கூற வேண்டுவதேயில்லை. "உள்ளங் கனிந்தபோதெல்லாம் உவந்து உவந்து பாடுமே" என்னும் நாவின் வேந்தர் வாக்கினை நோக்குமிடத்து கவிதைத் தோற்றத்திற்குத் தக்க வானம் களிப்பு மிகுந்த உள்ளமே என்பது பெறப்படுகின்றது. என்றால். பாரதியாரின் வாக்குப் படி ஊமைச் சனங்கள் வாழ்ந்த இடத்தில் உயர்ந்த இலக்கியம் எவ்வாறு தோன்றியிருக்கும்? ஆங்கில மொழியினைக் கட்டாயப் படுத்தி அம்மொழியில் தேர்ச்சி கொண்டவர்களே மேலோர் என்ற செயற்கை மதிப்பு இடம் பெற்றதன் விளைவாகத் தமிழ் நாட்டு அருங்கலைகள் போற்றப் பெறாது மக்கள் ஆதரவை இழந்தன. கலைகளில் ஒன்றான இலக்கியக் கலையும் தன் மாண்பிழந்து நின்றது எனல் மிகையாம். தமிழ் மொழியைப் பேணுதல் என்பதே எள்ளி நகையாடுஞ் செயலாகத் தமிழ் மக்களால் கருதப்பட்டது. "நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்று ஒரு சில தொண்டர்கள் இசைத்தனர். இங்கும் அங்கும் இருந்த தமிழ்ப் புலவர் ஒரு சிலர் அதை மீண்டும் இசைத்தனர். ஆனால், சுவைக்க வைக்கவில்லை ஏன்? சுவைக்கவும் காணினர். மற்ற இடங்களில் கலை—அறிவு "அணுவிற்கு எவ்வளவு" என்ற நிலைதான் நிலைத்தது.

ஆனால், வாழ்வும், தாழ்வும் இரவும் பகலும் போல் மாறி மாறி வந்தேயாக வேண்டும். இது இயற்கை நியதி. எனவே, தமிழ் இலக்கிய உலகினுக்கும் 'மறுமலர்ச்சி ஏற்பட்டு விட்டது. எதிர்காலத் தமிழுலகில் வீடுதோறும் கலையின் விளக்கம் என்று தனக்கே அமையப் பெற்ற மாபெரும் தீர்க்க தரிசன வன்மையால் கவிதைக் கிழியில் தீட்டிய பாரதியாரின் கனவு நனவாகிக் கொண்டே வருகின்றது. வாழ்க்கைப் புயலின் விசைவாலும் அடிமையாட்சியினால் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பினாலும் உணர்ச்சி உந்தப்பட, அதன் காரணமாகத் தமிழ் மக்களின் உள்ளத்தில் வீரக் கனல் முகிழ்த்து வீசியது. எதனால்? கவிதையினால் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. தமிழ் மொழிப்பற்று கொண்டு கலைகளை வளர்க்க வழிகோலி விட்டனர். எட்டுத் திக்குகளிலும் சென்று எல்லாக் கலைச் செல்வங்களையும் தமிழில் கொண்டு குவிக்க வேண்டும் என்னும் ஆர்வம் மிக்கெழுந்து விட்டது எல்லார் உள்ளத்திலும்.

'யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்'

''செந்தமிழ் நாடெனும்
போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது
காதினிலே''

'கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் உன் (தமிழ்) உதரத்துதித் தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்'

'உலகமெலாந் தமிழோசை செழிக்கச் செய்வீர்' என்று ஒவ்வொரு தமிழனும் உண்மை நிலையை; வாழ்ந்த நிலையை உணர்ந்து தருக்கிக் கூறும் காலம் வந்துவிட்டது. புத்துலக ஆற்றலின் பரிணாமமாய் இறவாத புகழுடைய பல ஆய்வு (முன்னோர்கள் கருத்தையும் வாழ்வையும் ஒட்டிய) நூல்கள் தமிழின் கண் தோன்றுகின்றன. இத்தகைய 'மறு மலர்ச்சி' மகிமைதனத்துடன் தான் தற்காலத் தமிழ் இலக்கிய நங்கை பூத்துக் குலுங்குகின்றாள். அடிமையுணர்ச்சி நீங்கிப் புதுமையுணர்ச்சி ஓங்கி மொழி வாழ வேண்டும்—வாழ்வுக்கு அடிப்படையான இலக்கியம் ஓங்க வேண்டும். வினைவால் மக்கள் பயனடைய வேண்டும்'' என்னும் போக்கில் இன்றைய இலக்கியச் சக்கரம் சுழல்கின்றது.

சிறக்க, மறு மலர்ச்சித் தீயின் பயனாக விரைவாக வளர்ந்து வரும் இலக்கியத்தின் போக்கு வகை, திருத்தம் முதலியன வற்றைப்பற்றி ஆராய்கல் வேண்டும். தொன்று தொட்டுத் தமிழ் இலக்கியம் அடைந்து வந்துள்ள வளர்ச்சியினை எண்ணிப் பார்க்குமிடத்து, நெடுங் காலம் வரையில் தமிழ்க் கவிதைகளே மிகுந்து உரை நடை வளராமலேயே இருந்து வந்தது தெரியவரும். ஆனால், தற்போது நூல்கள் யாவும் உரை நடையிலேயே திகழ்கின்றன. ''இசையும் சந்த நயமுந்தான் முதன் முதலில் குழந்தையுள்ளத்தில் உவகையூற்றினை உண்டாக்குகின்றன; எனவே, சமுதாயம் குழந்தை நிலையில் இருந்த ஆதிகாலத்தில் மனிதன் இலக்கியத்தினை ஆக்கமுற்பட, அவன் ஒலி நயம் மிகுந்த பாடலைப் பொழிந்தான். கவிதை வசனத்திற்கு முந்திவிட்டது'' என எமர்சன் என்னும் மேலை நாட்டு ஆசிரியர் எழுதிய ''கவிதையும் கற்பனையும்'' என்னும் நூலில் விளக்கிக் கூறுகின்றார்.

இது தமிழ் மொழிக்கு மிகவும் பொருந்துவதாகும். பொருளைத் தன் நிலையில் நின்று காணும் அறிவியல் முறை (Scientific method) உரை நடைக்கு வேண்டற்பாலது. ஆனால், தமிழர் கண்டும் காணமுற்படாத ஒன்று பொருளைப் பொருளாக ஒன்றிக் காணும் கலைப்பண்பையே பழந் தமிழர் இலக்கியத்தில் காண்கின்றோம். ஆகலின், ஆதித் தமிழ் நாட்டில் கவிஞன் ஒருவனே கதை சொல்பவனாகவும், நீதி வகுப்பவனாகவும், வரலாறு தொகுப்பவனாகவும், தத்துவம் போதிப்பவனாகவும் இருந்தருக்க வேண்டும்.

(வரும்)

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏன் இத்தனை மதங்கள் இருக்க வேண்டும்? என்று அவர்கள் கேட்டார்கள். நான் அவர்களைப் பதிலுக்குச் சில கேள்விகள் கேட்கிறேன். சிந்தித்துப் பார்க்கட்டும். பூந்தோட்டத்தில் இவ்வளவு வகையான மலர்கள் ஏன்? இருக்கின்றன? பல மதங்கள் ஏன்?

சங்கீதத்தில் ஒரே ஸ்வரம் இருந்தால் போதாதா? ஏன் பல ஸ்வரங்கள் இருக்கின்றன? அவ்வளவு ஸ்வரங்கள் இல்லாமற் போனால் இராகம் பாட முடியாதல்லவா?

அதுபோலவே ஒவ்வொரு மதமும் ஒரு சங்கீத ஸ்வரத்திற்கும் சமானம். அவைகளனைத்தும் சேர்ந்து சேர்ந்து ஆத்மாவுக்கு இனிய சங்கீதம் பாடுகின்றன

ஆகவே, சன்மார்க்க வாழ்க்கைதான் மதம் என்பதை அறியுங்கள். சன்மார்க்க வாழ்க்கைத் தத்துவத்தை உபதேசிப்பதுதான் மகோபதேசமாகும்.

மதம் ஜப மணிகளை உருட்டுவதில் இல்லை சங்கீதங்கள் பாடுவதிலும் இல்லை. வைதிக கருமங்களும் மதமன்று.

ஏழை மக்கள் கூடும் சந்தைகளிலே இறைவன் இருக்கிறார். ஏழைகளின் குடிசைகளிலே இறைவன் இருக்கிறார். இங்கு இறைவனைத் தரிசிக்காதவர்கள் ஆலயங்களில் தரிசிக்க முடியாது.

புதிய வேதம் ஒன்று இருப்பதைப் பாருங்கள். மக்கள் சமுதாயத்திலே ஏழைகளை வணங்கிப் பணி செய்யுங்கள். அந்த ஏழை மக்களின் உடைந்த உள்ளத்திலே ஆண்டவனைக் கண்டு தரிசியுங்கள்.

# "நன்றே தோழி நம் கணவன் வாழ்வே"

K. அமுதாம்பிகை.

இல்வாழ்க்கையில் ஆடவரும் பெண்டிரும் இரு கண்களாக விளங்குபவர்கள். எனவே, இல்லறம் நடத்துங்கால் ஏற்படும் இன்ப துன்பங்களை இருவரும் ஒருங்கே ஏற்பராவர். ஆயினும், ஆடவரினும் பெண்டிரே இல்லறத்திற்கேற்ற சிறப்பியல்புகளை எய்துகின்றனர். அவர்களாலேயே இல்வாழ்க்கை அளப்பரும் பெருமையடையக் காணலாம். "இல்லதென் இல்லவள் மாண்பானால்" என்பது மெய்ம்மொழியன்றோ.

இல்லறத்திற்குரிய காரணம் பற்றி இல்லாளென்றும், மனையறத்திற்குரிய காரணம் பற்றி மனையாளென்றும் பெயர் பெற்ற பெருமை பெண்டிற்கேயன்றோ? இல்லானென்றும் மனையானென்றும் ஆடவரை அழைக்கும் வழக்கம் என்றும் எங்கும் இல்லை. இல்லானென்னுஞ் சொல்லால் ஆடவனைக் குறிப்பின் ஒன்றுமில்லாதவனென்றே பொருள்படும். "இல்லானை இல்லாளும் வேண்டாள்" என்பது முதுரை.

ஆடவர் வெளியே சென்று ஆள்வினையான் பொருளைத்தேடி வருபவராவர். பெண்டிர் வீட்டின்கண் அப்பொருளைக் கொண்டு அகமிக மகிழ்வர். மனையகத்தே நிகழும் எவ்வகை நிகழ்ச்சியும் பெண்டிரே பெரிதுங் கண்டிருப்பர். அவற்றைப் புறத்தே சென்று பொருள் தேடியுழலும் ஆடவர் அறிவதரிதே. மக்களை வளர்க்கும் பொறுப்பு மிக்கவரும் மகளிரேயாவர். ஆடவர் வீட்டிலிருந்து தம் மக்களிடத்து அன்பு காட்டி அளவளாவுதற்கு வாய்க்கும் காலம் மிகச் சிறிதே. மக்கள் பலரைப் பெற்றிருப்பினும் ஒவ்வொருவர் உள்ளக் குறிப்பையும் உணர்ந்து மகிழ்விக்கத் தக்கவர் மகளிரே. மக்கள் மட்டுமின்றி மனையகத்தே உள்ளவர் கட்கேற்ப நடந்து மனையை விளக்கமுறச் செய்யப் பெற்றவர் பெண்டிரேயல்லரோ? ஆள்வினையாற்றி அயர்வோடு ஆடவர் வீடுவரின் அவ்வேளையில் அவர்தம் அயர்வினைப் போக்கி இன்பத்தை ஆக்குபவர் யாவர்? மெல்லியலாரே அத்தகைய நல்லியல்புகளை அமையப் பெற்றவரென்று சொல்லின் மிகையாகாது. கணவனின் ஆதரவிலே உண்டு உடுத்தி எல்லாம் என்னாலேயே நடைபெறுகிறது என்று இறுமாந்து, தன் குடும்பம் என்றும் பிற்காலச் செம்மை வாழ்வை நோக்காமலும் தம் பெருமை கொண்டு அணுக்கமானவர்களை ஒதுக்கித் தருக்கித் திரியும் பெண்களால் அந்தோ! எத்தனை குடும்பம் பாழ்பட்டிருக்கிறது எத்தனை கணவன்மார் தற்கொலை புரிந்தும், கூறாற் சந்நியாசம் மேற்கொண்டும் போயினர் அம்மம்ம அத்தகைய பெண்கள் நாட்டிற்கு விரோதிகளேயாவர்.

'மனைக்கு விளக்கம் மடவார்' என்னும் வாக்கிற்கேற்ப, மாசுகளைப் போக்கி மனையை விளக்கஞ் செய்பவர் அந்நல்லாரேயல்லரோ மனையறத்திற்கு வேண்டும் நற்குண நற்செய்கை பலவும் வாய்த்த மகளிர்க்குரிய கடமை மற்றொன்றும் உண்டு. அஃதென்னை? கணவனின் வருவாயை அறிந்து அதற்குத் தக்கவாறு செலவு செய்து வாழ்க்கையை நடத்துதலேயாம். கொழுநன் கொண்டுவரும் பொருள் கொஞ்சமேயாயினும் தன் கைத்திறத்தினால் நல்லுணர்ச்சி இன்புற ஊட்டுவது இல்லக் கிழத்தியின் இயல்பேயன்றோ! இல்லறம் சிறந்து விளங்க வேண்டுமெனில் இனியவாய குணங்கள் பலவும் பெண்டிற்கு இயல்பாக இருத்தல் வேண்டும்.

இனி, இங்குக் கூறியவாறு மாண்புறு குணங்கள் மனையாட்டியின்கண் அமைந்திலவாயின் இல்வாழ்க்கையில் இன்பமென்பது எட்டுணையும் காணவியலாது. பெருங்குடியிற் பிறந்து பிறர் மதிக்க வாழும் பெருமை பெற்ற போதிலும் ஒருவனுக்கு வாய்த்த மனையாள் பேய்த்தன்மையுடையளாயின் அவனடையும் பயன் யாது? ஒரு பயனும் பெற முடியாதென்பது ஒருதலை.

"மனை மாட்சி இல்லாள் கண்
இல்லாயின் வாழ்க்கை
எனை மாட்சித் தாயினும் இல்"

என்னும் பொதுமறையும் இதனை விளக்கும் பொருட்டே எழுந்ததன்றோ?

பெண்ணுலகு சீர் பெறும் பொருட்டுப் பெருமை சான்ற பெண்மணியின் வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்றை எடுத்துக்காட்டுதல் இங்கு வேண்டற்பாலதாயிருக்கின்றது.

உயர் குடியிற் பிறந்தாள்; உருவுந் திருவுமிக்காள்; அறிவுஞ் செறிவும் அமைந்தாள்; ஒழுக்கமும் விழுப்பமும் உற்றவள்; பன்னீராட்டைப் பருவத்தாள்;

தன்னிகரற்ற தலைவி; வாழ்வினை உருத்துவந்தூட்டியது. பலவாற்றானும் தகுதி பெற்ற நல்லாண் மகனொருவனைப் பார்த்தாள்; அவ்வேளையில் அவனும் அவளைப் பார்க்கச் செவ்வேளை யொத்த அவ் வேந்தலின் சிந்தையை ஈர்த்தாள்; இருவர் உள்ளமும் ஒன்றியது. அவ்வாண் மகன் வறுமைக்கு உறைவிடமாக வாழ்பவனாதலின் அவளை எவ்வாறு அடையக் கூடுமென அஞ்சினன். அம்மாசாசியோ இம்மாநிலத்தினும் பெரிதாக அவன் அன்பையே அடைய விரும்பினள். அதனால், தன் பெருஞ் செல்வமும் சிறியதாகத் தோன்றியது. அவள் உள்ள நிலையுணர்ந்த பெற்றோரும் உடன்பட்டனர் இருவருக்கும் மகிழ்ச்சியுற மண நிகழ்ச்சி முடிந்தது. காதலனுடன் சென்ற காரிகை தீதிலா இல்லறத்தை ஏற்று நடத்தலாயினள் வறுமையிற் செம்மை யுடையாராக வாழும் அவர்களின் வாழ்க்கை இன்ப வாழ்க்கை யாகவே விளங்கியது. "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்ப" மன்றோ? கணவனின் கனிந்த அன்பில தாய் வீட்டையும் மறந்தாள்.

"தழுவின கை இறைசோரின் தமிடம் என்றேனைத் தளர்வுற்று அழுவினை செய்யும் அஞ்சொல் பேதை அறிவு' எனவும், "யாழ் இயல் மென் மொழி வல் மனப்பேதை" எனவும் கூறிக் கூறி அவளின் நற்றாய் புலம்பினள். சிறிது காலஞ் சென்றது. தலைமகளின் பெற்றோர் அவள் இல்வாழ்க்கை எவ்வாறுளது என்பதை அறிய விரும்பினர். ஆகலின், அவளை அன்புடன் வளர்த்து வந்த செவிலியையும் இன்னுயிர்த் தோழியையும் அனுப்பினர். செவிலியுந் தோழியும் தலைமகள் வாழும் ஊர்க்குச் சென்றனர். அவள் உறையுஞ் சிறு குடிலைக் குறுகினர். தலைமகள் தன்னை வளர்த்த அன்னையையுந் தோழியையும் அன்பு ததும்ப வரவேற்றாள். 'என்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி' என்றாள் தன் மகளின் முகமும், மொழியுங் கண்டும் கேட்டும் மகிழ்ந்த செவிலி அவள் இனிது வாழ்வதாகவே அறிந்தாள்.

உள்ளத் தலத்தில் ஓவாதுறையும் உயிரனைய தலைவி! செய்குன்றுகள்; நல்ல மலையுடைய வாவிகள் அவை விசும்பின் கண் இயங்குதலான் வருந்துந் திங்கள் அயர்வுயிர்க்கும் பொழில்கள், இவ்விடம் மிசை யெங்கும் உலகத்தில் பொய் முதலாகிய குற்றங்கெட மறைபவர் மறை சொல்லுமிடம் ஏந்திழாய்! இவ்விடம் எய்தற்குக் கருவியாகிய குன்றமாகிய நீண்ட வில்லையுடைய அம்பலவற்கிருப்பிடம். இத்தன்மைத்து நம ஊரென்பது நினக்குத் தெரியும் பண்டு நீயும் நானும் ஆயத்தொடும் சேர்ந்து பொழிலுங் குன்றும் உலாவி. பூக் குற்றும் சுனைபெடிர் கூவியும் ஆடிய இன்ப விளையாட்டுக்கள் நினைவில் வரும்போதெல்லாம் நின்னைப் பற்றிய சிந்தனை எழுவதுண்டு. செல்வச் செழுங்காப்பில் எங்கள் அனைவர்க்கும் கண்ணாக வளர்ந்த நீ. உயிரனையானோடு நடாத்தும் வாழ்வைக் காண அவாவுற்று இவண் வந்தோம். நின் பிறந்த வீட்டின் பெருமைக்கும் புகுந்த வீட்டின் சிறுமைக்கும் எத்துணையோ ஏற்றத்தாழ் விருக்கின்றதே. உன் கணவனுடனிருந்து நீ நடத்தும் இல் வாழ்க்கை உனக்கு இன்பமூட்டுகின்றதா? என்பதை நின் வாயிலாகவே கேட்டறிய ஆசை

(வரும்)

## உபகாரங்கள்

(மறைத்திரு ஞானியாரடிகளின் வாய்மொழி)

ஒரு அறையில் விளக்கு இருக்கின்றது; எரிகின்றது. அவ்விளக்கு எனக்குப் பார்த்தலில் முழுத்துணையாக இருக்கின்றது கண் பார்ப்பதில்லை. பார்க்குஞ் சக்தியைக் கண்ணுக்குத் தருவது விளக்கு. கண், விளக்குப் பார்க்கும் அளவே பார்க்கும். கண்ணுக்கென்று பார்க்கும் ஆற்றல் இருந்தால் விளக்கொளி செல்லா இடத்திலும் கண்ணொளி செல்ல வேண்டும்; சுவருக்கு அப்பாலிருக்கும் பொருளைப் பார்க்கின்றதா? இல்லை. காரணம் விளக்கொளி அறைக்கு அப்பால் இல்லை. விளக்கொளி காணும் இடத்தைக் கண்ணும் காணும். எனவே, விளக்கு தானும் காணவேண்டியிருக்கின்றது. விளக்கு காண்பதையே நாமும் காண்கிறோம் ஆகலின், விளக்கு காட்டுதலோடு காணுதல் உதவியும் புரிகிறது.

கடவுள் நிலையும் இவ்வாறே. நாம் பார்க்கும் ஆற்றலை இறைவன் தருவது காட்டும் உபகாரம். உடனிருந்து தானும் காண்பது காணும் உபகாரம் இவ்வுண்மையை விளக்கவே கோயிலில் உண்ணச் செய்கின்றனர். திருவிசைப்பாவும் "தொண்டனேன் நுகருமா நுகரே" "தொண்டனேன் விளம்புமா விளம்பே" என இசைப்பது இது பற்றியே. 'நான் உண்ண வேண்டும் அதற்காக நீ உண்' 'நான் பேச வேண்டும் அதற்காக நீ பேசு' என்பது பொருள் எனவே, கடவுள் விளக்கினைப் போலக்காணும் உபகாரத்தையும் காட்டும் உபகாரத்தையும் செய்கின்றார்.

'தமிழ் வண்டு,

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம் மாம்பாக்கம், மதுராந்தகம். (அஞ்)